JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 563 /2024 |
| | : | Prosecution P.W - 28 |
| NAME | : | செல்வன் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday of 18.03.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது வெய்காலிப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் முடிதிருத்தும் கடை வைத்திருக்கிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எதிரி மாயவன் என்பவரை எனக்கு தெரியும். அவர்கள் மீது நம்பிக்கையின் பெயரில் சீட்டு போட்டேன். அ.சா 1 கிருஷ்ணன் அ.சா 2 அந்தோணிராஜ், அ.சா 3 டேவிட் அமல் ராஜ், சாட்சிகள் செல்வராஜ், ஜோசப் ராஜ், அருமைகிளி, பாலமுருகன், செல்வ ராணி, பூங்கொடி சூசை, சீதாலெட்சுமி, ராம லெட்சுமி, பொன் பாண்டி, சாந்தி, குணசீலன், முத்து லெட்சுமி, செல்வ குமாரி, முருகன், சரோஜா, குமரேசன், மணிராஜ், பொன் சேகர், சுதா, ரவிக்குமார், ஜெய ஜோதி, ஜானகி, பவழக்கொடி, தெய்வ கனி ஆகியோர்களை எனக்கு தெரியும். எங்கள் ஊர்காரர்கள். 2010 லிருந்து சீட்டு நடந்து வருகிறது. நான் சீட்டு போட்டு எடுத்திருந்தேன். 2019 ல் நின்று விட்டது. நான் ரூ.60000 சீட்டில் 6 சீட்டு போட்டிருந்தேன் 38 வாரங்களாக ரூ.70440 பணம் செலுத்தியிருந்தேன். மாயவன் கோவிலில் வைத்து சீட்டு நடத்துவார்கள். அங்கு வைத்து ஞாயிற்று கிழமை இரவு 7 மணியளவில் பணம் செலுத்தினேன். 2019 ல் சீட்டு நடத்தாமல்

இருந்தார்கள். எதிரிகள் ஊரை விட்டு போய்விட்டார்கள். கிருஷ்ணன் என்பவருடன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். எதிரிகளிடம் கேட்ட போது தகாத வார்த்தைகளால் திட்டினார்கள். சீட்டு எடுக்கும் போது புரோ நோட்டில் கையொப்பம் வாங்குவார்கள். அந்த புரோ நோட்டை கேட்ட போது அந்த புரோ நோட்டை எதிரிகள் கொடுக்க மாட்டோம் என்று சொல்லிவிட்டார்கள். எரித்து விட்டோம் என்று சொல்லிவிட்டார்கள். நான் செலுத்திய பணம் எனக்கு திரும்ப வரவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கில் சொல்லியுள்ளதற்கு முன்பாக எதிரிகளிடம் எப்போது சீட்டு போட்டேன் என்றால் 2010 லிருந்து சீட்டு போட்டேன். நான் செலுத்தியதாக சொல்லும் மேற்சொன்ன சீட்டு எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்றால் 2019. என்னை போலிசார் எப்போது விசாரித்தார்கள் என்றால் 2019 அக்டோபர் மாதம் விசாரித்தார்கள். புகார் கொடுத்து எவ்வளவு நாள் கழித்து விசாரித்தார்கள் என்றால் 10 லிருந்து 20 நாள் இருக்கும். நான் செலுத்தியதாக சொல்லும் சீட்டு பணவிவரத்தை எழுதி வைத்திருக்கிறேன் என்றால் இல்லை. 38 வாரங்களாக ரூ.70440 பணம் செலுத்தியிருந்தேன் என்று சொல்வதை ஒவ்வொரு வாரமும் எவ்வளவு பணம் செலுத்தினேன் என்று எழுதி வைத்திருந்து அதை கூட்டி கணக்கு பார்த்து சொன்னேன் என்றால் இல்லை எழுதி வைக்க வில்லை. பக்கத்தில் உள்ளவர்கள் பணம் செலுத்தியிருந்தார்கள். அதிலிருந்து நான் அந்த தொகையை சொன்னேன். 1ம் எதிரி ஆசிரியர் பணி செய்கிறார் என்றால் சரிதான். எதிரிகள் ஊரை விட்டு போய்விட்டார்கள் என்று சொல்லியுள்ளதில் எவ்வளவு நாட்கள் போய்விட்டார்கள் என்றால் 3 வாரம் ஊருக்குள் வரவில்லை. 1ம் எதிரி ஊரிலிருந்து ஆசிரியர் பணிக்கு சென்று கொண்டிருந்தார் என்றால் சரிதான். புகார் மனுவை நான் படித்து பார்த்தேனா என்றால் ஆமாம். அந்த புகார் மனுவில் யார்யாருக்கு எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும் என்றும் எத்தனை சீட்டு என்றும் எழுதியிருந்ததா என்றால் ஆள் பெயர் எழுதியிருந்தது தொகை எழுதவில்லை. புகாரில் நாங்கள் எத்தனை பேர் கையொப்பம் செய்தோம் என்றால் நாங்கள் கையொப்பம் செய்யவில்லை. நாங்கள் கையொப்பம் செய்யவில்லை என்று சொல்லியுள்ளதில் கிருஷ்ணன், அந்தோணிராஜ், டேவிட் அமல் ராஜ் ஆகியோர் உண்டா என்றால் கிருஷ்ணன், அந்தோணிராஜ் கையொப்பம் செய்தார்கள். எனக்கு எத்தனை புரோ நோட்டு தர வேண்டும் என்றால் எதுவும் இல்லை.

நான் சொல்வது போல் எதிரிகள் சீட்டு நடத்தியிருப்பது கிடையாது என்றாலும் நான் எதிரிகளிடத்தில் சீட்டு போட்டிருப்பது கிடையது

என்றாலும் புகார் கொடுத்ததாக சொல்லும் காலத்தில் நான் காவல் நிலையம் சென்றிருப்பது கிடையாது என்றாலும் சரியல்ல. 1ம் எதிரி சீட்டு நடத்தாத நிலையில் நம்பிக்கையின் பெயரில் அவரிடம் சீட்டு போட்டதாக அ.சா 1 கேட்டு கொண்டதற்கு இணங்க அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. மகேஷ் மாயவன் என்னுடன் இப்போது பேசி கொண்டிருந்தாரா என்றால் ஆமாம். அவர் எதார்த்தமாக வந்துள்ளார். மகேஷ் மாயவன் என்னுடன் தான் காலையிலிருந்து இருக்கிறார் என்றால் நான் வரும் போது அவர் இங்கு இருந்தார். தற்போது வரை மகேஷ் மாயவன் என்னுடன் பேசிக் கொண்டிருந்தார் என்றால் சரிதான். மகேஷ் மாயவன் தரப்பிற்கும் எதிரிகள் தரப்பிற்கும் மாயவன் கோவில் நிர்வாகம் சம்பந்தமாக பிரச்சனை உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. எதிரிகளிடம் நான் எவ்வித சீட்டு பணமும் செலுத்தாத நிலையில் எதிரிகளிடம் பணம் கேட்டதாகவும் எதிரிகள் எங்களை தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும் அ.சா 1 மற்றும் மகேஷ் மாயவனின் தூண்டுதலின் பேரில் கொடுக்கப்பட்ட பொய் புகாருக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

<u>2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் முதல் விசாரணையில் சொன்னதை தான் போலிஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். என்னை எஸ் ஐ விசாரித்தாரா ஏட்டு விசாரித்தாரா என்றால் எஸ் ஐ விசாரித்தார். என்னை ஆண் போலிஸ் தான் விசாரித்தார் என்றால் சரிதான். நான் செலுத்தியது ஏல சீட்டு என்றால் சரிதான். ரூ.60000 சீட்டில் ஒரு சீட்டுக்கு வாரம் எவ்வளவு செலுத்துவேன் என்றால் ரூ.500 செலுத்துவேன். 6 சீட்டுகளுக்கும் ரூ.500 வீதம் ரூ.3000 செலுத்துவேன் என்றால் சரிதான். நான் எத்தனை வாரம் சீட்டு செலுத்தியுள்ளேன் என்றால் 38 வாரங்கள் செலுத்தியுள்ளேன். 38 வாரங்களும் 3000 செலுத்தியுள்ளேன் என்றால் சரிதான். வாரசீட்டில் 2வது சீட்டு மாயவன் கோவிலுக்கு என்றால் சரிதான். அதனால் தான் கோவிலில் வைத்து சீட்டு நடத்துகிறார்கள் என்றால் சரிதான். ஏலம் கேட்கும் நபருக்கு சீட்டு பணத்தை ஏலம் எடுத்தவுடன் கோவிலில் வைத்து கொடுத்து விடுவார்கள் என்றால் சரிதான். சீட்டு நின்றுவிட்டதால் அதற்கு முன்பு ஏலம் எடுத்த நபர்களும் சீட்டு நின்ற பின்பு பணம் செலுத்தவில்லை என்றால் சரிதான்.

நான் சொல்வது போல் முதல் விசாரணையில் சொன்னது போல இந்த வழக்கிற்கும் 2ம் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் இந்த 2ம் எதிரியோ அவருக்கு வேண்ட பட்டவர்கள் யாருமோ தனிப்பட்ட முறையிலோ கோவில் சார்பாகவோ சீட்டு நடத்தவில்லை என்றாலும்

சரியல்ல.

1ம் எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை 2ம் எதிரி தரப்பில் ஏற்று கொள்ள பட்டதாக தெரிவிக்கப் பட்டது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 563 /2024 |
| | : | Prosecution P.W - 27 |
| NAME | : | தெய்வ கனி |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday of 18.03.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது வெய்காலிப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் பீடிசுற்றும் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எதிரி மாயவன் என்பவரை எனக்கு தெரியும். அவர்கள் எங்கள் ஊர்காரர்கள். அ.சா 1 கிருஷ்ணன் அ.சா 2 அந்தோணிராஜ், அ.சா 3 டேவிட் அமல் ராஜ், சாட்சிகள் செல்வராஜ், ஜோசப் ராஜ், அருமைகிளி, பாலமுருகன், செல்வ ராணி, பூங்கொடி சூசை, சீதாலெட்சுமி, ராம லெட்சுமி, பொன் பாண்டி, சாந்தி, குணசீலன், முத்து லெட்சுமி, செல்வ குமாரி, முருகன், சரோஜா, குமரேசன், மணிராஜ், பொன் சேகர், சுதா, ரவிக்குமார், ஜெய ஜோதி, ஜானகி, பவழக்கொடி ஆகியோர்களை எனக்கு தெரியும். நான் எதிரிகளிடம் சீட்டு போட்டேன். எதிரிகள் 7 சீட்டு நடத்தினார்கள். நான் ரூ.33000 சீட்டில் 3 சீட்டு போட்டிருந்தேன். ரூ,60000 சீட்டில் 4 சீட்டு போட்டிருந்தேன். ரூ.62000 சீட்டில் 3 சீட்டு போட்டிருந்தேன்.

ரூ.33000 சீட்டில் 72 வாரங்களாக ரூ.48000 பணம் செலுத்தியிருந்தேன்.

ரூ. 62000 சீட்டில் 3 சீட்டுகளுக்கு ரூ 115000 க்கு மேல்

செலுத்தியிருந்தேன்.
ரூ. 60000 சீட்டில் 38 வாரங்களாக ரூ.45000 க்கு மேல் செலுத்தியிருந்தேன்.
சீட்டு பணத்தை மாயவன் கோவிலில் வைத்து ஞாயிற்று கிழமை இரவு 7 மணியளவில் எதிரிகளிடம் கொடுத்தேன். பணத்தை கொடுக்கும் போது புரோ நோட்டில் கையெழுத்து வாங்குவார்கள். சீட்டு போடும் போது 2010 ம் வருடம் 2018 க்கு மேல் சீட்டு நடத்தவில்லை. நாங்கள் கேட்டதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது தரமுடியாது என்று சொன்னார். எங்களை போல மற்ற நபர்களும் சென்று கேட்டோம். எதிரிகள் எங்கள் ஊர் காரர் என்பதால் நம்பிக்கையில் சீட்டு போட்டோம். நான் செலுத்திய பணத்தை திருப்பி தரவில்லை. கேட்டதற்கு தரமுடியாது என்று சொல்லிவிட்டார்கள். புரோ நோட்டில் கையொப்பம் வாங்கியதை எதிரிகள் கிழித்து போட்டிருப்பார்கள். நாங்கள் கேட்டதற்கு பதில் சொல்லவில்லை. கடையம் காவல் நிலையத்தில் நடவடிக்கை எடுக்க சென்றோம். சீட்டு பிரச்சனையில் உள்ள ஒரு ஆள்தான் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.
1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை
நான் மாயவன் கோவில் வரிதாரர் இல்லை என்றால் சரிதான்.
பூங்கொடி சூசைக்கு எந்த ஊர் என்றால் அது எனக்கு தெரியாது
பூங்கொடி சூசை என்பவரை எனக்கு தெரியாது என்றால் சரிதான்.
புகார் கொடுக்க நான் காவல் நிலையம் சென்றேனா என்றால் ஆமாம். புகாரை நான் படித்து பார்த்தேனா என்றால் எனக்கு படிக்க தெரியாது. காவல் நிலையம் சென்றோம். புகாரில் என்ன எழுதியுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். புகார் மனுவில் நான் கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. புகார் மனுவில் யார் கையொப்பம் செய்துகொடுத்தார் எனக்கு தெரியாது என்றால் சரிதான். புரோ நோட்டு நாங்கள் கொண்டு போய் கொடுத்தோமா அல்லது எதிரிகள் வைத்திருந்தார்களா என்றால் எதிரிகள் தான் வைத்திருந்தார்கள். புரோ நோட்டில் எத்தனை கையெழுத்து செய்தேன் என்றால் நான் பணம் செலுத்துவேன் புரோ நோட்டில் என்னிடம் கையொப்பம் வாங்கவில்லை. நான் சொல்வது போல் எதிரிகள் சீட்டு நடத்தியிருப்பது கிடையாது என்றாலும் நான் எதிரிகளிடத்தில் சீட்டு போட்டிருப்பது கிடையது என்றாலும் புகார் கொடுத்ததாக சொல்லும் காலத்தில் நான் காவல் நிலையம் சென்றிருப்பது கிடையாது என்றாலும் சரியல்ல. 1ம் எதிரி சீட்டு நடத்தாத நிலையில் நம்பிக்கையின் பெயரில் அவரிடம் சீட்டு போட்டதாக அ.சா 1 கேட்டு கொண்டதற்கு இணங்க அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் என்னை எப்போது

விசாரித்தார்கள் என்றால் 2018 ல் சீட்டு போட்ட போது விசாரித்தார்கள். நாங்கள் சீட்டு பணத்தை திரும்ப கேட்ட போது எங்களிடம் என்ன ஆதாரம் இருக்கிறது என்று எதிரிகள் கேட்டதாக நான் கூறுவது 1ம் எதிரியின் வேண்டாத நபர்களின் தூண்டுதலின் பெயரில் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரிக்கும் போது நான் மாயவன் கோவில் வரிதாரர் என்று சொன்னேனா என்றால் இல்லை.

2ம் எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

ரூ.33000/– சீட்டில் 1 சீட்டுக்கு வாரம் எவ்வளவு செலுத்த வேண்டும் என்றால் ரூ.300/– செலுத்த வேண்டும்.

ரூ.62000/– சீட்டில் 1 சீட்டுக்கு வாரம் எவ்வளவு செலுத்த வேண்டும் என்றால் ரூ.500/– செலுத்த வேண்டும்.

ஏலத்தில் கழிவு போக மீதி தொகையை தான் 1 சீட்டுக்கு செலுத்த வேண்டும் என்றால் சரிதான்.

ஒரு தொகைக்கான சீட்டில் ஏல கழிவு என்பது ஒரு நபர் போட்டிருக்கும் எல்லா சீட்டுகளுக்கும் பொருந்தும் என்றால் சரிதான். 4 அல்லது 5 சீட்டு போட்ட நபர்கள் தொடர்ந்து ஏலம் எடுக்க முடியுமா என்றால் கேட்டால் தருவார்கள் நான் பணம் தேவையில்லை என்பதால் கடைசியில் எடுத்துக் கொள்ளலாம் என்று இருந்தேன். அடுத்த அடுத்த வாரங்களில் சீட்டு பணம் எடுத்த நபர்கள் இருக்கிறார்கள் என்றால் சரிதான். ஏலம் எடுத்த நபர் அந்த வாரத்திலிருந்து ஒவ்வொரு சீட்டையும் கழிவு தொகையை கழிக்காமல் முழு சீட்டு தொகையையும் செலுத்த வேண்டும் என்றால் சரிதான். 2 வது சீட்டு மாயவன் கோவிலுக்குதான் என்றால் சரிதான். கோவிலில் வைத்து நடத்துவதால் தான் கோவிலுக்கு எடுத்து கொள்கிறார்கள் என்றால் சரிதான். ஒவ்வொரு வாரமும் எவ்வளவு கழிவு போகும் என்பதை நான் குறித்து வைத்திருப்பேன் என்றால் நான் குறித்து வைக்க வில்லை. 1 வாரம் 100 ரூபாய் கழிவு போகலாம் மற்றொரு வாரம் 120 கழிவு போகலாம். போலிசார் என்னை விசாரிக்கும் போது நான் இத்தனை சீட்டுகளுக்கு இவ்வளவு ரூபாய் செலுத்தியிருக்கிறேன் என்று சீட்டை போலிசிடம் கொடுத்தேன் என்றால் சரிதான். ஏலம் கேட்கும் நபருக்கு கழிவு தொகை போக மீதி தொகையை உடனே கோவிலில் வைத்து கொடுத்து விடுவார்கள் என்றால் சரிதான். சீட்டு நிறுத்தியதாக சொன்ன பின்பு அதில் சீட்டு எடுத்த நபர்களும் அந்த தொகையை திருப்பி செலுத்த வில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னதைதான் போலிஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். பெண் போலிஸ் விசாரித்தாரா ஆண் போலிஸ் விசாரித்தாரா என்றால் பெண் போலிஸ் விசாரித்தார். என்னை 1 மணி நேரம் விசாரித்திருப்பாரா என்றால் இல்லை

கொஞ்ச நேரம் விசாரித்தார்.
நான் சொல்வது போல் முதல் விசாரணையில் சொன்னது போல இந்த வழக்கிற்கும் 2ம் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் இந்த 2ம் எதிரியோ அவருக்கு வேண்ட பட்டவர்கள் யாருமோ தனிப்பட்ட முறையிலோ கோவில் சார்பாகவோ சீட்டு நடத்தவில்லை என்றாலும் சரியல்ல.
1ம் எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை 2ம் எதிரி தரப்பில் ஏற்று கொள்ள பட்டதாக தெரிவிக்கப் பட்டது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 563 /2024 |
| | : | Prosecution P.W - 26 |
| NAME | : | பவழக் கொடி |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday of 18.03.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது வெய்காலிப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் பீடிசுற்றும் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எதிரி மாயவன் என்பவரை எனக்கு தெரியும். நான் அவரிடம் சீட்டு போட்டிருந்தேன். அ.சா 1 கிருஷ்ணன் அ.சா 2 அந்தோணிராஜ், அ.சா 3 டேவிட் அமல் ராஜ், சாட்சிகள் செல்வராஜ் , ஜோசப் ராஜ், அருமைகிளி , பாலமுருகன், செல்வ ராணி, பூங்கொடி சூசை, சீதாலெட்சுமி, ராம லெட்சுமி, பொன் பாண்டி, சாந்தி, குணசீலன், முத்து லெட்சுமி, செல்வ குமாரி, முருகன், சரோஜா, குமரேசன், மணிராஜ், பொன் சேகர், சுதா, ரவிக்குமார், ஜெய ஜோதி, ஜானகி ஆகியோர்களை எனக்கு தெரியும். அவர்களும் சீட்டு போட்டிருந்தார்கள். ரூ. 60000/- சீட்டில் 3 சீட்டு போட்டிருந்தேன். நான் ரூ.35000/- மேல் 38 வாரங்களாக சீட்டு செலுத்தியிருந்தேன். மேற்படி சீட்டுப் பணத்தை மாயவன் கோவிலில் வைத்து இரவு 7 மணியளவில் செலுத்தினேன். எதிரிகள் சீட்டு ஏலம் எடுத்து வாங்குவார்கள். சீட்டு பணம் பெறும் நபர்களிடம் ரூபாய் நோட்டில்

கையெழுத்து வாங்குவார்கள். 2019 பொங்கலின் போது சீட்டை நிறுத்திவிட்டார்கள். அதற்கு பிறகு நாங்கள் கேட்ட போது நீங்கள் எங்கே சீட்டு போட்டிர்கள் என்று கேட்டார்கள். கிருஷ்ணனும் கேட்டார். நாங்கள் எல்லோரும் கேட்டோம். அப்போது நீங்கள் யாரிடம் சீட்டு போட்டீர்கள் என்று கேட்டார்கள். நாங்கள் புரோ நோட்டில் கையெழுத்து போட்டு கொடுத்திருந்தோம். ஆனால் எந்த இடத்தில் கையெழுத்து போட்டீர்கள் என்று மிரட்டினார்கள். 2010 லேயே ஒரு 4 சீட்டு போட்டு பணம் செலுத்தி சீட்டு பணம் வாங்கினோம். அந்த நம்பிக்கையில் சீட்டு போட்டோம். நான் செலுத்திய சீட்டு பணத்தை திருப்பி தரவில்லை. கடையம் காவல் நிலையத்திற்கு சென்று கிருஷ்ணன் என்பவருடன் போனோம். கிருஷ்ணன் புகார் கொடுத்தார். எதிரிகள் 7 பிரிவுகளாக சீட்டு நடத்தினார்கள். 200 நபர்களுக்கு மேல் சீட்டு போட்டிருப்பார்கள். நாங்கள் சுமார் 78 பேர் காவல் நிலையம் புகார் கொடுக்க சென்றோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை
எனது தகப்பனார் பெயர் என்ன என்றால் ஆத்தியப்பன்.
நான் மாயவன் கோவில் வரி தாரரா என்றால் இல்லை. போலிசார் என்னை விசாரிக்கும் போது நான் மாயவன் கோவில் வரிதாரர் என்று சொன்னேனா என்றால் இல்லை. பூங்கொடி சூசை கணவன் பெயர் என்ன என்றால் தெரியாது. பூங்கொடிசூசைக்கு எந்த ஊர் என்று எனக்கு தெரியாது என்றால் வெய்காலிபட்டி. காவல் நிலையத்தில் கொடுத்ததாக சொல்லும் புகாரை நான் படித்து பார்த்தேனா என்றால் இல்லை. காவல் நிலையத்தில் கொடுத்த புகாரை நான் பார்த்தேனா என்றால் இல்லை. புகாரில் யார் கையொப்பம் போட்டிருந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் கிருஷ்ணன் தான் கையொப்பம் போட்டிருந்தார். கிருஷ்ணனை தவிர வேறு யாரும் புகாரில் கையொப்பம் செய்யவில்லை என்றால் கிருஷ்ணன் மட்டும் தான் போட்டிருந்தார், எனக்கு தெரியவில்லை. என்னை போலிசார் எப்போது விசாரித்தார்கள் என்றால் 78 பேர் போனோம் எங்களிடம் விசாரித்தார்கள். அக்டோபர் 27 ம் தேதி விசாரித்தார்கள். காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்களா என்றால் ஆமாம். மாயவன்நான் சொல்வது போல் முதல் விசாரணையில் சொன்னது போல இந்த வழக்கிற்கும் 2ம் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் இந்த 2ம் எதிரியோ அவருக்கு வேண்ட பட்டவர்கள் யாருமோ தனிப்பட்ட முறையிலோ கோவில் சார்பாகவோ சீட்டு நடத்தவில்லை என்றாலும் சரியல்ல.
1ம் எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை 2ம் எதிரி தரப்பில்

ஏற்று கொள்ள பட்டதாக தெரிவிக்கப் பட்டது.

கோவில் நிர்வாகம் சம்பந்தமாக எதிரிகளுக்கும் மகேஷ் மாயவன் என்ற தரப்பிற்கும் பிரச்சனை உண்டு என்றால் எனக்கு தெரியாது. மகேஷ் மாயவன் இன்று நீதிமன்றத்திற்கு வந்திருக்கிறார் என்றால் ஆமாம். போலிசார் எங்களை வர சொன்னார்கள். நாங்கள் காலையில் வந்தோம். மகேஷ் மாயவன் வந்திருக்கிறார். மகேஷ் மாயவன் எதற்காக வந்திருக்கிறார் என்றால் அது எனக்கு தெரியாது. மகேஷ் மாயவன் என்பவர் மாயவன் கோவிலில் முன்பு சீட்டு நடத்தினாரா என்றால் அது அவர்களுக்கு தான் தெரியும். நாங்கள் எதிரிகளிடம் சீட்டு போட்டோம். தற்போது சொல்லியுள்ள சீட்டுக்கு முன்பாக மாயவன் கோவிலில் சீட்டு போட்டிருக்கிறோமா என்றால் ஆமாம் சீட்டு போட்டிருக்கிறோம்.

நீதிமன்ற கேள்வி மாயவன் கோவிலில் யாரிடம் சீட்டு போட்டோம் என்றால் பதில் எதிரிகளிடம் சீட்டு போட்டோம்.

மேற் சொன்ன சீட்டுக்கு முன்பாக எதிரிகளிடம் மாயவன் கோவிலில் வைத்து நடந்த சீட்டில் இந்த 1 ம் எதிரி மாயவன் சீட்டு நடத்தியிருப்பது கிடையாது என்றால் சரியல்ல.

நான் சொல்வது போல் இந்த வழக்கில் சொல்லியுள்ள சீட்டையும் இந்த 1ம் எதிரி மாயவன் நடத்தியிருப்பது கிடையாது என்றாலும் நான் செலுத்தும் சீட்டு பணத்திற்கு நாங்கள் புரோ நோட்டு கொடுத்திருப்பது கிடையாது என்றாலும் சரியல்ல. இந்த சீட்டு பணத்திற்கு முன்பாக 1 ம் எதிரி மாயவன் நடத்தாத நிலையில் நம்பிக்கையின் பெயரில் இந்த சீட்டு பணத்தை எதிரிகளிடம் நான் கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்லும் மகேஷ் மாயவன் இந்த எதிரிகள் மீது பொய்யான புகார் கொடுத்து வைத்து இன்று என்னோடு வந்து எனக்கு எப்படி சாட்சியம் அளிக்க வேண்டும் என்று சொல்லி கொடுத்ததன் பேரில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் உட்பட மற்ற நபர்கள் எதிரிகளிடம் நாங்கள் கொடுத்த சீட்டு பணத்தையும் புரோ நோட்டையும் திரும்ப கேட்டதாக கிருஷ்ணன் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஒவ்வொரு முறையும் சீட்டு பணம் செலுத்தும் போது புரோ நோட்டு கொடுப்போமா என்றால் சீட்டு பணம் எடுக்கும் போது புரோ நோட்டு கொடுப்போம். நான் எத்தனை புரோ நோட்டு கொடுத்தேன் என்றால் சீட்டு பணம் செலுத்தும் போது எதிரிகள் வைத்திருந்த ஒரு நோட்டில் சீட்டு பணம் செலுத்தியதை எழுதி கொள்வார்கள், சீட்டு பணம் எடுக்கும் போது அவர்கள் வைத்திருந்த ஒரு நோட்டில் சீட்டு பணம் எடுத்த நபரின் பெயரை எழுதி கையொப்பம் பெற்று கொள்வார்கள். நான் எத்தனை புரோ நோட்டு கொடுத்தேன் என்றால் சீட்டு பணம் எடுக்கும் போது ஒரு நோட்டில் சீட்டு பணம் எடுத்த

நபரிடம் கையொப்பம் வாங்குவார்கள் அதை தான் நான் புரோ நோட்டு என்று நினைத்து சொன்னேன். அந்த நோட்டில் சீட்டு எடுத்தவர்களின் பெயரை வரிசையாக எழுதி வைத்திருப்பார்களா என்றால் அது தெரியவில்லை. நான் எத்தனை தடவை ஏலம் கேட்க சென்றிருந்தேன்நான் சொல்வது போல் முதல் விசாரணையில் சொன்னது போல இந்த வழக்கிற்கும் 2ம் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் இந்த 2ம் எதிரியோ அவருக்கு வேண்ட பட்டவர்கள் யாருமோ தனிப்பட்ட முறையிலோ கோவில் சார்பாகவோ சீட்டு நடத்தவில்லை என்றாலும் சரியல்ல.

1ம் எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை 2ம் எதிரி தரப்பில் ஏற்று கொள்ள பட்டதாக தெரிவிக்கப் பட்டது.

என்றால் நான் போயிருப்பேன். சீட்டு பணம் செலுத்துவதற்கு நான் போவேன். சீட்டு பணம் எடுக்க என் கணவர் போவாரா என்றால் கணவர் போவார். என் கணவர் ஏலம் எடுத்திருக்கிறாரா என்றால் எடுத்திருக்கிறார். நீதிமன்ற கேள்வி மேற்சொன்ன ரூ.60000 சீட்டில் போட்டுள்ள 3 சீட்டுகளை என் கணவர் ஏலம் கேட்டு எடுத்துள்ளாரா என்றால்

பதில் என் கணவர் எடுக்க வில்லை.

இந்த 1ம் எதிரி மாயவன் எந்த வித சீட்டு பணமும் எந்த காலத்திலும் நடத்தியிருப்பது கிடையாது என்றாலும் அவர் ஆசிரியர் பணி செய்வதாலும் மாயவன் கோவில் நிர்வாகம் சம்பந்தமாக இரு பிரிவுகள் இருப்பதாலும் எதிரி ஒரு பிரிவில் நிர்வாக தாரராக இருப்பதாலும் அந்த ஒரு பிரிவில் நிர்வாக தாரராக 1ம் எதிரி இருப்பதை நிரந்தரமாக நீக்க வேண்டும் என்பதற்காக கொடுக்கப்பட்ட பொய் புகாருக்கு பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் எதிரிக்கு ம் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் முதல் விசாரணையில் சொன்னதைதான் போலிஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் என்ன என்ன சீட்டு போட்டிருக்கிறீர்கள் என்று கேட்டார்கள், நான் சொன்னேன்.

ரூ.60000/- சீட்டில் 1 சீட்டுக்கு வாரம் ரூ.500/- செலுத்த வேண்டும் என்றால் சரிதான். அந்த ரூ500/- ல் ஏல கழிவு போக மீதி பணத்தை செலுத்துவோம் என்றால் சரிதான். ஏல கழிவு என்பது நான் போட்ட 3 சீட்டுக்கும் பொருந்தும் என்றால் சரிதான். ஏலம் எடுத்த நபர் அந்த வாரத்திலிருந்து சீட்டுக்கு உண்டான முழு தொகையை கழிவு இல்லாமல் செலுத்த வேண்டும் என்றால் சரிதான். நான் 3 சீட்டுகள் போட்டது போல் மற்ற நபர்கள் 4 சீட்டுகள் அல்லது 5 சீட்டுகள் போட்டது உண்டு என்றால் சரிதான். 3 அல்லது 4 சீட்டு போட்டவர்கள் 1 சீட்டை 1 வாரத்தில் எடுத்த

பிறகு அதே நபர் அடுத்த வாரத்தில் மற்றொரு சீட்டை எடுக்க முடியுமா என்றால் இல்லை 2 அல்லது 3 வாரங்கள் கழித்து கொடுப்பார்கள். எத்தனை பேர் 4 சீட்டு 5 சீட்டு போட்டார்கள் என்று தெரியும் என்றால் அது எப்படி சார் எனக்கு தெரியும்.

யார் யார் எத்தனை சீட்டு போட்டிருக்கிறார்கள் என்று தெரிந்தால் தான் ஒரே நபர் 1 வாரத்தில் சீட்டு எடுத்த பின்பு மறுவாரம் அதே நபர் சீட்டு எடுக்கும் போது நான் தடுப்பேன் என்றால் நாங்கள் மருத்துவ சமுதாயம் இன்னொறு ஆள் சீட்டு எடுக்கிறேன் என்றால் நான் என்ன சொல்லமுடியும். அந்த ஆளுக்கு பயந்து தான் விட்டு கொடுக்கிறேன் என்றால் பயம் எல்லாம் இல்லை. நான் செலுத்திய பணத்தை தான் கேட்கிறோம். சீட்டு எடுக்கும் ஆள் பெரும்பான்மை சமுதாயம் என்பதால் தான் நான் மருத்துவ சமுதாயம் என்று சொல்லி விட்டு கொடுக்கிறேன் என்றால் பெரிய சமுதாயம் என்று இல்லை, நான் அந்த இடத்தில் ஒஸ்தியாக பேச முடியாது. 2வது சீட்டு மாயவன் கோவிலுக்கு தான் என்றால் சரிதான். அதனால் தான் கோவிலில் வைத்து சீட்டு நடத்தினார்கள் என்றால் சரிதான். ஒவ்வொரு வாரமும் எவ்வளவு கழிவு போனது என்று எழுதி வைத்தேனா என்றால் அப்போது எழுதி வைத்தேன் , இப்போது அந்த நோட்டு எங்கு போனது என்று தெரியவில்லை. போலிசார் என்னை விசாரிக்கும் போது நான் எழுதி வைத்ததை காட்டினேன் என்றால் சரிதான். போலிசாரிடம் நான் எழுதி வைத்ததை கொடுத்தேனா என்றால் காட்டினேன். அதிகபட்சம் எவ்வளவு கழிவு போகும் என்றால் ரூ 10000 , 12000 வரை கழிவு போகும். ஏலம் கேட்கும் நபர் எவ்வளவு அதிக தொகை கேட்கிறாரோ அதை தான் கழிவு என்று கழிப்பார்கள் என்றால் சரிதான். ஒவ்வொரு வாரமும் ஏலம் எடுக்கும் போது கழிவு தொகை போக மீதி தொகையை ஏலம் எடுக்கும் நபரிடம் ஏலம் நடத்தும் நபர் கொடுத்து விடுவார் என்றால் சரிதான். சீட்டுக்குரிய பணத்தை முழு தொகையாக செலுத்திவிட்டு கழிவு தொகையை பின்பு வாங்கும் நபர்கள் உண்டு என்றால் சரிதான். 38 வாரங்களாக சீட்டு எடுத்த நபர்களில் கோவில் தவிர மீதி 37 நபர்கள் சீட்டு நின்ற பின்பு சீட்டு எடுத்த பணத்தை திரும்ப செலுத்தவில்லை என்றால் சரிதான். என்னை பெண் போலிஸ் விசாரித்தாரா ஆண் போலிஸ் விசாரித்தாரா என்றால் ஆண் போலிஸ் விசாரித்தார்.

நான் சொல்வது போல் முதல் விசாரணையில் சொன்னது போல இந்த வழக்கிற்கும் 2ம் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் இந்த 2ம் எதிரியோ அவருக்கு வேண்ட பட்டவர்கள் யாருமோ தனிப்பட்ட முறையிலோ கோவில் சார்பாகவோ சீட்டு நடத்தவில்லை என்றாலும் சரியல்ல.

1ம் எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை 2ம் எதிரி தரப்பில் ஏற்று கொள்ள பட்டதாக தெரிவிக்கப் பட்டது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi